

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தாராபுரம் மேற்கு ஒன்றியம் சின்னபுத்தூர் ஊராட்சி பகுதியில் தேர்தல் பணி குறித்தும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை குறித்தும் ஆலோசனைக் கூட்டம் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.ஏ.கே.சித்திக், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் மி.ஜோசப்பெல்சி மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட்,மாவட்ட பிரதிநிதி சமூக எஸ்.முரளி,ஜோசப் சந்திரன்,தாராபுரம் மேற்கு ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார் இளைஞர் அணி துணை அமைப்பாளர் நந்தகுமார் லோகேஷ், மாணவரணி துணை அமைப்பாளர் அருண்குமார் அமராவதி,கால்வாய் பாசன சங்க தலைவர் பூவேந்திரன், பழனிச்சாமி கிளைக் கழக செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டின்

ஒட்டுமொத்த தீய சக்தியாய் விளங்குகிறார் விஜய்!

முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் கண்டனம்!

நாகர்கோவில், அக். 2- ‘‘தமிழ்நாட்டின் ஒட்டுமொத்ததீயசக்தியாக விளங்குகிறார் முதல்வர் விஜய்’’ என்று முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



நிதி இல்லை, நீதி இல்லை, நாதி இல்லை என்று கூவிய நீங்கள் இன்று நிலையில்லா மனிதனாக மக்களை மக்களை ஏமாற்றி தமிழ்நாட்டை வழிநடத்துவதை பார்க்கும் போது தமிழ்நாடு அதாள பாதாளத்திற்கு செல்லும் என்பதற்கு இந்த நான்கு மாத ஆட்சியே சாட்சியாய் நிற்கிறது.

தினம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறுமிகள் பாலியல் வன் கொடுமை என்று எத்தனை நடந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாத முதல்வர் கிடைத்ததை எண்ணி மக்கள் புலம்புவது உங்கள் காதில் கேட்பதாக இல்லை என்பதை உங்கள் செயல் பாடுகள் மூலமாக தினம் நாங்கள் அறிந்துக் கொள்கிறோம். நிதி ல்லை என்று கூப்பாடு போட்ட நீங்கள் போட்ட நீங்கள் தமிழ் நாடு சட்டப்பேரவையில் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உள்ளிட்டோர் முதலமைச்சராக பணியாற்றிய அறையை மாற்றி அமைக்கும் வகையில் 5வது மாடியில் முதலமைச்சர் அறையை மாற்று ஏற்பாடு செய்து தேவையில்லாத நிதி சுமை ஏற்படுத்தியதை அனைவரும் அறிவோம்.

இதற்கிடையில் புதிதாக தலைமைச் செயலகம் அமைக்கப்படும் என்று அறிவித்துவிட்டு, அதற்கான பணிகளும் தொடங்கப்படும் என்று அறிவித்துள்ள உங்களிடம் சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன் ?

புதிதாக அமைக்கப்படும் தலைமைச் செயலகம் 1200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுவது உங்களுக்கு நிதி சுமையாக தெரியவில்லையா?

அப்படி அமைப்பது அதுவும் மீனவ மக்களின் அடிப்படை ஆதாரமாக இருக்கக் கூடிய பட்டினப் பாக்கம் தான் வேண்டுமா?

ஏன் நீங்கள் நிதி சுமையை குறைக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புதிய தலைமை செயலகமாக உருவாக்கப்பட்ட ஓமந்தூரார் மாளிகையை (தற்போது பன்னோக்கு மருத்துவமனை) ஏன் சில கோடிகளில் புனரமைத்து புதிய தலைமைச் செயலகமாக பயன்படுத்த கூடாது?

இந்த கட்டிடம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதி அருகிலேயே அமைந்திருப்பதால் சட்டமன்றத் கூட்டத்தொடர்களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் நேரத்தில் கலந்துக்கொள்ளவும், தேவையில்லாத போக்குவரத்து சிரமம் மற்றும் எரிபொருள் வீணாவதையும் தடுக்கும் நிலையை உருவாக்கலாம் அல்லவா ?

இந்த தலைமை செயலகம் 13.03.2010 அன்று திறக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் 2010 2011 ஆண்டுக்கான பட்ஜெட் மார்ச் 19, 2010 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அதற்கான கூட்டத்தொடர் முழுவதும் இந்த ஓமந்தூரார் மாளிகையில் தான் நடைபெற்றதை வரலாறு பதிவு செய்துள்ளதை இங்கு யாரும் மறுக்க முடியாது.

இதையும் மீறி நிதியை விரயம் செய்வதும், மக்களின் வாழ்வாதாரங்களை சீர்குலைக்கும் வகையிலும் நீங்கள் மேற்க் கொள்வது உங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் செய்யும் செயலாக தெரியவில்லையா?

எனவே உலக தரத்தில் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஓமந்தூரார் ராமசாமி அவர்கள் பெயரில் அமைக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகம் இருக்கும் போது நிதி சுமையை கருத்தில் கொண்டு அதனை பயன்படுத்த முன் வர வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இந்த நேரத்தில் முன் வைக்க விரும்புகிறேன்.

நான் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த கால கட்டத்தில் இந்த புதிய தலைமைச் செயலகத்தில் அதற்கான தரமான வடிவமைப்புகளை கொண்டு தகுந்த வசதிகளுடன் எனது துறைசார்ந்த அலுவல் பணிகளை மேற்க் கொண்டுள்ளேன் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கு தற்போது செயல்பட்டு வரும் மருத்துவமனையை கடந்த தி.மு.க. ஆட்சியில் கழக தலைவர் முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் உலகத் தரத்தில் கொண்டு வரப்பட்ட கிண்டி மருத்துவமனையோடு இணைக்கும் வகையில் இடமாற்ற இந்த அரசு ஆலோசிக்கலாம்.

குறிப்பாக கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த தலைமை செயலக கட்டிடத்தை திறந்து வைத்த பெருமை தற்போது உங்கள் ஆட்சிக்கு ஆதரவு அளித்துள்ள காங்கிரஸ் கட்சி தலைவர்களான அப்போதைய பிரதமர் திரு.மன்மோகன்சிங் மற்றும் திருமதி.சோனியா காந்தி அவர்களையும் சாரும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

திமுகவை தீயசக்தி என்று விமர்சித்த நீங்கள், நீங்கள், தற்போது தமிழ் நாட்டின் ஒட்டுமொத்த தீயசக்தியாய் உருப்பெற்று வருவதையும் கவனத்தில் கொண்டு கடைகோடி மாவட்டத்தில் இருந்து ஒலிக்கும் மக்களின் குரலாக இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே! ஆரையடா, சொன்னாயடா?

இடைத்தேர்தல் இரண்டு நடைபெற உள்ளதால், தமிழ் நாடு மண்ணுருகும் புரட்டாசியிலும், பொன்னுருகக் காய்ந்து பெரும் அனல், வெப்பக்காற்று சுழன்றெழுந்து, சூரியக் கதிர்கள் எதிரிகளை சுட்டெரிப்பதுபோல வாட்டி, வதைக்கிறது.

பேராசை, பதவி அரிப்பு இவை மேலோங்கியதால், அரசியல் கேலிக்கூத்து அரங்கேறி, ஆயாராம், காயாராம் களுக்கு அனுவளவும் குறையாதவர்கள் நாங்கள் என அ.தி.மு.க.வின் அடையாளமாக வெற்றி பெற்றவர்கள், வாக்களித்த மக்களின் ஜனநாயக கடமையை மனசாட்சியை குழிதோண்டி புதைத்து , தமிழர்கள் நன்றி மறவாதவர்கள் குறிப்பாக பெண்கள் என்ற இலக்கணத்தை பிழைத்து, ஆளுங்கட்சியில் ஐயக்கியமாகி விட்டதால், இன்று மதுராந்தகம், தாராபுரத்தில் இடைத்தேர்தல்.

வாக்களித்த மக்களுக்கு வாய்க்கரிசி!

அட்டைக்கத்திகளுக்கும், வாடகை வாய்களுக்கும், களவாணி கூட்டத்திற்கும், கள்ளபிராண்ட் பிரடுகளுக்கும் மென்றுதின்ன அவல்.

பிணற்றின் ஓட்டிய காசையும் கடந்து, வாயில் வைத்த வெற்றிலையை எடுத்துக் குதப்பும் அசிங்கப்பிறவிகள் அரசியல் நாகரிகம் கடந்து, வயிற்றால் பின்புறம் வெளியேறு வதை வாயால் கக்கும் வளர்ந்து கெட்ட பிறவி நேற்று தேர்தல் பரப்புரை எனும் பெயரில் தனது அரசின் சாதனை யென்று எதையும் சொல்லாமல்,

திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை, தென்னவர் ஏற்றிப் போற்றும் சின்னவர் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களை, ஆண்ட காலத்தில் அடித் தட்டு மக்களின் தேவை யறிந்து திட்டம் தீட்டிய திராவிடப் பேரரசர் தளபதி யவர்களை, எல்லா வற்றையும் விட, மறைந்தும் மறையாமல், நமது சிந்தையணு ஒவ்வொன் றிலும் நிறைந்து விட்ட, நிலைத்துவிட்ட உலகத் தமிழினத் தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் இழிவாகப் பேசி, தலைவர் தளபதி, தலைவர் கலைஞர் இவர்கள் வந்தாலும் மதுராந்தகத்தில் தி.மு.க. வெற்றி பெறாது எனும் வெற்றுக்கூச்சல் போட்டி ருக்கிறான்.

அந்நாளில் வடக்கே தோல் வலிவோடு திகழ்ந்த புஜபல பராக்கிரமன் ஹர்ஷவர்த்தனரைத் தோற்கடித்த சாளுக்கியப் பெருவேந்தன் இரண்டாம் புலிகேசியை வெற்றி கண்டு, வாதாபியைத் தீக்கிரையாக்கியது நரசிம்ம பல்லவனின் தளபதி பரஞ்சோதியே (பின்னாளில் சிறுதொண்ட நாயனார்) அன்றி மாமன்னன் நரசிம்ம பல்லவன் அல்ல என்பதை இந்த 24 ம் சுலிகேசிகள் அறிந்திருக்க நியாயமில்லை.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெறாறியை தலைவர் தளபதியவர்களுக்கு காணிக்கையாக்கியவர் தனது பெரும் உழைப்பால், அன்றைய துணை முதல்வர் உதயநிதியவர்களே!

கடல் கடந்து வாழும் தமிழர்களின் உயிர், உடல் உதிரத்தில் ஊறிப்போன சின்னவர் உதயநிதியை மதுராந்தகத்தின் எல்லையைக் கடக்க முடியாது என்கிறது சென்ற ஆண்டு கரூர் படுகொலையில் ஓடிப்போய் ஒளிந்த தொடை நடுங்கி தற்குறி.

உலக வரலாற்றில், தேர்தல் ஜனநாயகத்தில் போட்டியிட்ட 13 சட்டமன்றத் தேர்தல்களிலும் தோல்விக்கு, தோல்வி தந்த வெற்றித்திருமகன் தலைவர் கலைஞர் அவர்களின் தியாக வரலாறு, தேர்தல் வரலாறு அறியாமல் ஆணவத்தின் உச்சத்தை மிச்சமில்லாமல் கக்கிவிட்டுப் போயிருக்கிறான்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் போட்டியிட்ட குளித்தலை தொகுதியில் பதிவான வாக்குகளில் தண்ணீர் குளம் எனும் வாக்குச்சாவடியில் பதிவான 167 வாக்குகளில் ஒரு ஓட்டைக்கூட அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் பெறவில்லை என்பது தலைவர் கலைஞர் அவர்களின் தேர்தல் சரித்திரத்தின் முதல் பக்கம்.

திருச்சி மாவட்டம் குளித்தலையில் வெற்றி பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்னை தஞ்சை மாவட்டத்தில் எதிர்த்து நின்று வெற்றி கொள்ள முடியுமா? என அறைகூவல் விடுத்த மிகப்பெரும் செல்வந்தர், அந்நாளைய காங்கிரஸாரின் கஜானா பரிசுத்த நாடாரை 1962 ல் தந்தை பெரியார் அவர்களின் பெரும் எதிர்ப்பையும் மீறி தோல்வியடைய வைத்த வெற்றிவீரர் தலைவர் கலைஞர் என்பதைத் தெரிந்து கொள்ளாமல்,

1989 சட்டமன்றத் தேர்தலில் தான் போட்டியிட்ட துறை முகம் தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தார்கள் என்ற வரலாற்றைப் படைத்த தேர்தல் பெரு வேந்தர் தலைவர் கலைஞர் அவர்களின் பெருமையறியாமல்,

அதே தேர்தலில் சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் பதிவான வாக்குகள் கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்தில் எண்ணப்பட்ட நிலையில் ஒரு வாக்குச்சீட்டில் “தமிழ்நாட்டில் கலைஞரை விட்டால், ஆளில்லை!” என செல்லாத வாக்கானாலும், அது சொல்லாமல் உணர்த்திய உண்மையின் அடர்த்தியை உணர அறிவாற்று, பேசியும், ஏசியும், பிதற்றிய அறிவிலிகளுக்குச் சொல்வோம்.

தலைவர் கலைஞர் அவர்களின் பேனா மை உருவாக்கிய பிரதமர்களின் கணக்கு தெரியுமா?

குடியரசுத்தலைவர், பிரதமர் பொறுப்புகள் தன்னை தேடிவந்த நேரங்களில் தமிழர் நலனொன்றே, நல்வாழ் வொன்றே தனது லட்சியம் என மனதிற்கொண்டு, “எனது உயரம் எனக்குத் தெரியும்!” என லாவகமாக மறுத்த அரசியல் வித்தகர் தலைவர் கலைஞர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக 36 களின் வாக்கு அவசியம் எனும் நிலையில் 22 வாக்குகளுடன் இன்றையக் கழகப் பொருளாளர், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர் டி.ஆர்.பாலுவையும், 15 ஆண்டுகளின் பின்னே அதேயளவு குறைந்த 23 வாக்குகளில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி அவர்களையும் வெற்றி பெறவைத்த அசாத்திய திறமை, அதிசயமிக்க இராஜதந்திரம் மிகுந்த தலைவர் கலைஞர் அவர்களின் வழிவந்த தளபதியவர்களை, உதயநிதியவர்களை ஏளனமாகப் இழிபிறவிகளின் பேச்சைக்கேட்டால், இரத்தம் கொதிக்கிறது, எரிச்சல் எழுகிறது.

வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



திட்டித்தீர்க்க தேடிப் பார்த்தேன் வார்த்தைகளை. திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் கண்முன் வந்து, நாகரிக அரசியல் என்று நினைவூட்டிக் கற்பனைக்கு கடிவாளம் இருக்கிறார்.

இருக்கவே இருக்கிறது, என்றோ உரைத்த அவ்வை மூதாட்டியின் சிலேடைத்தமிழ்.

ஆமாம்.

கூரையில்லா வீடே!
குலராமன் தூதுவனே!
எட்டே கால் லட்சணமே!
எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!
ஆரையடா,
சொன்னாயடா??
இப்”போதைக்கு “ இது போதும்.

மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்

இ.பரந்தாமனை ஆதரித்து தொ.மு.ச. பேரவை சார்பில் வாக்கு சேகரிப்பு!

இணைப்புச் சங்க நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்க – தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் வேண்டுகோள்!

சென்னை, அக். 2- ஆளும் த.வெ.க. அரசின் குதிரை பேரத்தால் மதுராந்தம் தொகுதிக்கு இடைத் தேர்தல் வந்துள்ளது. இந்த இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்கள் போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக தொ.மு.ச. பேரவை சார்பாக இன்று (2.10.2026) காலை 7.00 மணிளவில் வாக்கு சேகரிக்கும் பணி நடைபெறுகிறது.



எனவே இந்த வாக்கு சேகரிக்கும் நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க நிர்வாகிகள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு கழக வேட்பாளர் வெற்றிக்கு பாடுபட வேண்டுமென தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

குதிரை பேர த.வெ.க. அரசின் அதிகார வேட்கை காரணமாக மதுராந்தகம் தொகுதிக்கு இடைத்தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் கழக சட்டமன்ற வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களை ஆதரித்து, இன்று (02.10.2026 வெள்ளிக்கிழமை) காலை 7.00 மணிக்கு அச்சரப்பாக்கம் தெற்கு ஒன்றியம், கடமலைப்புத்தூர் ஊராட்சி பகுதிகளில் தொ.மு.ச. பேரவையின் சார்பாக தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், துணைத்தலைவர் இரா. பொன்னுராம், அமைப்புச் செயலாளர் வே.வேலுசுவாமி, இணைப் பொதுச் செயலாளர்கள், பா.மணிமாறன், ஜெ. விஜயகுமார், அலுவலகச் செயலாளர்கள் ஆ.சீ. அருணகிரி, ப.பன்னீர்செல்வம், செயலாளர்கள் - எம்.சண்முகம், என்.தனசேகரன், ப.பன்னீர்செல்வம் (SETC), ஆர்.சண்முகசுந்தரம், மா.அருணகிரிநாதன், இராஜகாந்தம், சோம.அழகிரி, சு.பத்மநாபன், ஐ.சி.எப். துரை, என்.கோமளா மற்றும் செங்கல்பட்டு தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள், தொ.மு.ச. பேரவை இணைப்பு சங்க நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் தொ.மு.ச. நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி மு. சண்முகம் கேட்டுக் கொள்கிறார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக பாஸ் முறைகேடு புகார்!

அமைச்சர் நிர்மல் குமாருக்கு எதிராக தி.மு.க. கவுன்சிலர்கள் போராட்டம்!

மாமன்றக் குழுத் தலைவர் மா.ஜெயராம் தலைமையில் கருப்புச் சட்டை அணிந்து பங்கேற்பு!

மதுரை,அக்.2- மதுரை மாநகராட்சியின் 41ஆவது மாமன்றக் கூட்டம் பொறுப்பு மேயர் நாகராஜன் மற்றும் ஆணையாளர் கௌரவ குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் தொடங்கியவுடன் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது குறித்து மேயர் உரையாற்றத் தொடங்கியபோது, அங்கிருந்த தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் மாமன்ற குழு தலைவரும் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினருமான மா. ஜெயராம் தலைமையில் கருப்புச் சட்டை அணிந்து, கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு திடீர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கும்பாபிஷேக பாஸ் வழங்கியதில் முறைகேடு புகார்!

மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்கான நுழைவுச் சீட்டுகள் (பாஸ்) வழங்கியதில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாக தி.மு.க. உறுப்பினர்கள் மாமன்ற குழு தலைவர் மா. ஜெயராமன் தலைமையில் குற்றம் சாட்டினர். மேலும், “கும்பாபிஷேகம் மீனாட்சி அம்மனுக்கு நடைபெற்றதா அல்லது அமைச்சர் நிர்மல் குமாருக்கு நடைபெற்றதா?” என்று முழக்கங்களை எழுப்பி அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாமன்றத்தில் அ.தி.மு.க. - தி.மு.க. உறுப்பினர்கள் இடையே காரசார வாக்கு வாதம்

மாமன்ற கூட்டத் தொடர் வளாகத்திற்குள் இதுபோன்று ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி இல்லை எனக் கூறி, போராட்டத்தில் ஈடுபட்ட தி.மு.க. உறுப்பினர்களை உடனடியாக வெளியேற்று மாறு மேயர் உத்தரவிட்டார்.

மேயர் அறிவுறுத்திய பின்னரும் தொடர்ந்து அரசுக்கு எதிராகவும் பாஸ் முறைகேடு தொடர்பாகவும் முழக்கமிட்டதால், தி.மு.க. உறுப்பினர்கள் மாமன்றக் கூட்டத் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதால் கூட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு போதிய மாமன்ற உறுப்பினர்கள் (மெஜாரிட்டி) இல்லாமல், நீண்ட நேரமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப் படாமல் கூட்டம் தடைபட்டது. பின்னர், வெளியேற்றப்பட்ட திமுக உறுப்பினர்கள் மீண்டும் கூட்டத்திற்குத் திரும்பியதைத் தொடர்ந்து 28 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் சாலமன் பாப்பையா வசித்த பகுதிக்கு அவரது பெயரைச் சூட்டுவது உள்ளிட்ட சிறப்புத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த மாமன்ற குழு தலைவர் மா.ஜெயராம், மீனாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகம் மன்னர்கள் காலத்தில் இருந்து நடைபெற்ற வரலாற்றை சுட்டிக்காட்டியும் மக்களாட்சி காலத்தில் முன்னாள் முதலமைச்சர்கள் கலைஞர், ஜெயலலிதா ஆகியோரது ஆட்சி காலங்களிலும் பல லட்சம் மக்கள் கூடிய கும்பாபிஷேகம் தமிழக வெற்றிக்கழக அமைச்சர்களின் செயல்பாட்டினால் மிக மோசமான நிலையில் நடைபெற்றதை சுட்டிக்காட்டினார்.



மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து முன்னாள் அமைச்சரும் கழக தேர்தல் பணிக்குழுத் தலைவரும் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கள்ளபிரான்புரம், வள்ளுவவாக்கம், ராமாபுரம் ,மோகல்வாடி, திம்மாவரம், அன்னங்கால், மலைவையாவூர் பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின்போது உடன் முன்னாள் அமைச்சர் இராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.